# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

2017 பிறந்தவர்கள்

**பின்வரும் 5 குறள்களை மட்டும் ஒப்பித்தல் செய்தல். குறள்களுக்கான பொருள் விளக்கம் கூறத்தேவையில்லை.**

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (குறள் 391)

ஐயங்கள் ஏதுமின்றித் தெளிவாகக் கல்வி கற்க வேண்டும். கற்றதற்கு ஏற்ப, நாம் நடந்து கொள்ள வேண்டும்.

2. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (குறள் 80)

அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் நிறைந்த இந்த உடம்பு, அன்பு மட்டும் இல்லை என்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின்மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும்.

3. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (குறள் 396)

மணல் உள்ள இடத்தில் கேணி தோண்டிய அளவிற்கேற்ப நீர் ஊறும். அதுபோல, மக்களுக்கு அவர்கள் கற்ற அளவுக்கேற்ப அறிவு பெருகும்.

4. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று (குறள் 108)

ஒருவர்நமக்குச் செய்த உதவியை ஒருபோதும் மறப்பது நல்லதல்ல; அவர்நமக்குச் செய்த தீமையைச்செய்தஅப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

2017 பிறந்தவர்கள்

5. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. (குறள் 86)

எமது வீட்டுக்கு வருவோரை அன்போடு வரவேற்க வேண்டும்.
அகத்தால் மிக மகிழ்ந்து அன்போடு உணவளிக்க வேண்டும்.

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.